உ
சிவமயம்

ஸ்ரீகுமர குருபர சுவாமிகள் அருளிய
திருவாரூர் நான்மணிமாலை
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் உரை

வெளியீடு:-

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
தமிழகச் சைவ நெறிக்கழகம்
திருச்சிராப்பள்ளி-8.

——*

உ

சிவமயம்

ஸ்ரீகுமர குருபர சுவாமிகள் அருளிய
திருவாரூர் நான்மணிமாலை
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் உரை

வெளியீடு:- 1

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
தமிழகச் சைவ நெறிக்கழகம்
செயலகம்
47 அக்கிரஹாரம் வரகனேரி,
திருச்சிராப்பள்ளி-8.

விலை - ரூ 4-00

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அதிபர், ஸ்ரீ காசிமடம்.

வாழ்த்துரை

காவிரிநாடு எனவும் புனல்நாடு என்வும் போற்றப் பெறும் சோழவளநாட்டில் கமலை என்றும் கமலாலயம் என்றும், புகழப்படுவது திருவாரூர் ஆகும். இத்தலம் மண்மகளின் இதய கமலம் என்றும் போற்றப் பெறும் இத்தலத்தில் வாழ்ந்தவர்களைச் சிவகணங் களாகவும், இத்தலத்தில் பிறந்தாலே முத்தி எனவும் கூறுவர். இத்தகைய சிறப்பு வாய்ந்த திருவாரூர் பூங்கோயிலின் பெருமையும், தேவாசிரிய மண்ட பத்தின் உயர்வும், செங்கழுநீர் ஓடையின் சிறப்பும், வன்மீகநாதர் புற்றிற் கோயில் கொண்டிருக்கும் காட்சியும் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் திருவாரூர் நான்மணி மாலையில் சிறப்பித்துக் கூறியருளியுள்ளார். ஸ்ரீ சுவாமிகள் பாடிய பிரபந்தங்களுள் திருவாரூர் நான்மணிமாலையும் ஒன்றாகும். சொல்நயம், பொருள் நயம், மிக்குடைய இந்நூல் தமிழ் மக்கள் யாவரும் எளிதிற் பொருளுணர்ந்து அறியும் முறையில் வயிநாகரம் பாலகவி திரு. வே இராமநாதன் செட்டியார் அவர்கள் எழுதிய பொழிப்புரையுடன் நமது திருமடத்திலிருந்து வெளிவரும் ஸ்ரீ குமரகுருபரர் திங்கள் இதழில் வெளிவந்துள்ளதைத் தொகுத்து நூல் வடிவில் திருமுறைக்காடு எனும் திருத்தலத்தில் 20-12-92 அன்று வெளியிடுவது போற்றற்குரியது. இச்சீரிய பணியினை மேற்கொண்டுள்ள தைலா கோபால்சுவாமி அவர்கட்கு. நலம் பலவும் உண்டாகச் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம். சுபம். சிவசிவ

திருப்பனந்தாள்— 612 504. 30-11-92

முனைவர். சி. பாலசுப்பிரமணியன்
எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.
முன்னாள் துணைவேந்தர் - தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.

அணிந்துரை

தமிழ் நாடு ஞானபூமி என்று ஆன்றோர்களால் அழைக்கப் பெறும் திருவுடைய நாடாகும். ஞானமும் கல்வியும் இணைந்து புகழ்பூத்து விளங்கிய தவச்சான்றோர்கள் பலர் இந்த மண்ணில் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றார்கள். சிவநேயச் செல்வர்கள் ஆன்மீகமும், அருந்தமிழும் பாங்குறத் திகழப் பல்வேறு வகைகளில் தோன்றிவருகின்றார்கள்.

'திருவாரூர் நான்மணிமாலை' சைவ உலகில் தனிப்பெரும் சிறப்புடன் விளங்கும் பக்தி நூலாகும். நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை, அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம். நேரிசையாசிரியப்பா எனும் அளவில் நான்கு யாப்பு அமைதியில் இந் நூல் விளங்குகின்றது, பெரும் புலவரால் அருளிச் செய்யப் பெற்ற நூலாதலின் இதன் சொற்கட்டு செறிவுள்ளதாகவும், பொருளமைதி ஆழ்ந்தும் விரிந்தும் அமைந்திருக்கின்றது.

சைவ உலகில் சிறப்புறத் திகழும் இந் நூலுக்கு வயிநாகரம், பாலகவி திரு. வே, இராமநாதன் செட்டியார் அவர்கள் தம் நுண்மாண் நுழைபுலம் விளங்கச் சிறந்தோர் உரைநடை விளக்கத்தினை ஆக்கி அளித்துள்ளார்கள் இந்த நூற்றாண்டில் பாலகவி அவர்கள் புகழ் பூத்த தவச்செல்வராகத் திகழ்கின்றார்கள், அவர்களுடைய தமிழ்ப் புலமை, சைவ நெறியில் தோய்ந்த பற்றுள்ளம், சைவ நூல்களில் தெளிவு, நுண்மாண் நுழைபுலம் காணும் மாட்சி முதலியன அறிஞர் பலரால் அடிக்கடி பாராட்டப் பெறுவனவாகும், ஆழ்ந்த கவிநலமும் பொருள் நலமும் அமைந்த 'திருவாரூர் நான்மணிமாலை'க்குப் பாலகவி அவர்கள் கண்டிருக்கும் பொருள் நுட்பம் அறிஞர் அவாவும் தனிச் சிறப்புடையதாகும்,

உரைநடைச் சிறப்புக்கு இரண்டொரு எடுத்துக்காட்டுகளைக் காண்போம். 'இணங்கு' எனத் தொடங்கும் ஏழாவது பாடலுக்கு ஆசிரியர் அளித்துள்ள விளக்கம் மனம்கொளத்தக்கது ஆகும்.

"இசைவாகிய தாமரை மலரிலிருக்கும் திருமகள் ஒடுங்குகின், திருமாலின் மனத்திற் பொலிந்த தியாகேசப் பெருமான், அழகி நிறைந்த பொன்னணிகளையுடைய நிலமகளினது மனத்தாமரை யினுடத்தும் விளங்குதலால், அம்மனத் தாமரையாகிய வாசனை வீசுகின்ற தாமரைக் குளங்கள் சூழ்ந்த திருவாரூர், கமலால மென்னும் பெயரைப் பெற்றது. தெய்வப் பெண்களையொத் மங்கையர்களது உள்ளமும், அவர்களது அன்புடைய கணவர்கள் உள்ளமும் ஒன்றாகவே இருக்கும்."

மேலும், அரியசெய்யுள்களுக்கு உரிய வகையில் புலமை நுட்பம் புலப்பட பாலகவி அவர்கள் கண்டிருக்கும் உரைநடை விளக்கத்தினை இருபத்தொன்றாவது பாடலுக்கு அவர் குறிப்பி டிருக்கும் தெளிவுரையினைச் சான்றுகாட்டலாம்.

ஒன்றிரண்டு இடங்கள் என்றில்லாமல் பாலகவி அவர்க தொட்ட இடமெல்லாம் தம் மதிநலம் விளங்கப் பொருளினை கண்டுள்ளார்கள். பொருள் நுட்பமும் மாட்சியும் மிகுதியாக இ உரைநடை திகழ்வது சைவ மக்கள் பெற்ற பேறாகும்

சிவநேயச் செல்வர் வயிநாகரம், பாலகவி திரு. வே இராமநாதன் செட்டியார் அவர்கள் தேவகோட்டை' செட்டிநாடு எனும் இதழில் ஆசிரியராக புகழ்பிறங்கியவர்கள். நாட்டு கோட்டை நகரத்தார் சமூகத்தின் தனிப்பெரும் தவச்சிரேட்ட நாட்டுக்கோட்டைச் சமுதாயத்திற்கே உரியவராகப் புலமை முற்றி புலமையாளரராக அவர்கள் திகழ்வது தமிழ்நாடு செய நற்பேறாகும். 'குமரகுருபரர்' இதழில் அவர்கள் திங்க தோறும் எழுதிவந்த உரை இன்று நூல் வடிவம் பெறுகிற இந் நூலினைத் தமிழ் உலகு குறிப்பாகச் சைவ உலகு படித்து பயன்பெறவேண்டும். அந்த அளவுக்கு உரை, திட்பம், நுட் செறிந்ததாக அறிஞர் அவாவும் திறத்தினதாக, புலவர் போற்று பெற்றியதாகத் திகழ்கின்றது. இந் நூல் தமிழுக்குப் புதுவ என்று கூறி சிவநேயச் செல்வர் வயிநாகரம், பாலகவி திரு, வே இராமநாதன் செட்டியார் அவர்கள் தம் புலமைநலம் விளங் இதுவரை உரை காணப்படாது செய்யுள் வடிவிலேயே இருக்கு சைவ நூல்களுக்கு உரை எழுதி, தமிழ் அன்னைக்கு அ சேர்ப்பதோடு சைவ உலகிற்கும் தொண்டுசெய்வாராக-

சென்னை. இவண்,
11-12-92 சி. பாலசுப்பிரமணியன்.

பதிப்புரை

ஆன்மாக்களைச் சைவசித்தாந்தம் — விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகையாகப் பிரிக்கின்றது. ஆணவம் கன்மம், மாயை என்னும் மும்மலங்களை உடைய சகலருக்கு உலக குருமார்களை இடமாகக்கொண்டு இறைவன் ஞானத்தை அருளுவன் என்பது சித்தாத்த முடிவு, இவ்வகையில் நமக்குக் குருநாதராக அமைந்தவரே சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள், சிவாகம ஞானபாநு, பழநி ஈசான சிவாசாரியரின் முதன்மைச் சீடராகிய நம் குருநாதர், அவர் காட்டிய வழியில் சைவ சமயத்தைப் பரப்பி வருகின்றார். நம் குருநாதரிடம் சிவதீட்சை பெற்றோர் அவர்தம் திருப்பெயரில் இயக்கம் ஒன்றை நிறுவ அவாவினர். திருவருள் துணையோடு இம்முயற்சியின் பயனாக அமைந்ததே சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் தமிழகச் சைவநெறிக் கழகம். பதிமூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இக்கழகம் தோற்று விக்கப்பட்டது. இக்கழகத்தின் அடிப் படை நோக்கங்கள் மூன்று, அவையாவன ;-

1) நம் குருநாதரின் நான்மங்கலத் திருநாளாகிய மார்கழிச் சுவாதித் திருநாளை பாடல் பெற்ற திருத் தலங்களில் ஆண்டுதோறும் சிவபூசை மாநாடாக நடத்துவது.

2) நம் குருநாதர் எழுதிய — உரை வரைந்த நூல்களை வெளியிடுவது.

3) வேத சிவாகம நெறிக்கு உட்ப்பட்டுச் சைவ சமயத்தை வளர்ப்பது.

மேற்கண்ட மூன்று நோக்கங்களுக்குட்பட்ட பணிகளைக் கழகம் தொடர்ந்து செய்து வருகின்றது. இவ்வகையில் நம்குருநாதரின் அவதார நன்னாள் விழா 20-12-92 ஞாயிற்றுக்கிழமை அன்று வேதங்கள் பூசித்த திருமறைக் காட்டில் (வேதாரண்யம்) நடைபெற திருவருள் கூட்டுவித்துள்ளது. இவ்விழாவில் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் அருளிய ''திருவாரூர் நான்மணிமாலை'' என்னும் பிரபந்தத்திற்கு நம் குருநாதர் வரைந்த உரையை நூலாக

வெளியிடுகின்றோம். இந்நூலுக்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ கா மடாலய அதிபர், கயிலை மாமுனிவர், காசிவாசி ஸ்ரீலஸ்ரீ முத்து குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வாழ்த்துரை அருவ யுள்ளார்கள் மேலும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள்தம் திருக்கரா களால் நூலை வெளியிடவும் இசைந்துள்ளார்கள். ஸ்ரீலஸ் சுவாமிகள் அவர்களுக்கு நன்றி மலர்களை காணிக்கை யாக்குகின்றேன்.

தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவா திரு. சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் நூலுக்கு அணி துரை வழங்கியுள்ளார்கள் அன்னாருக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம். ஸ்ரீ காசி மடாலய அதிபர் தம்பொற்கரா களால் வெளியிட, நூலின் முதற்படியை வேதாரண்யம் பத்மஸ்ரீ திரு. வே. அப்பாக்குட்டி அவர்கள் பெறுகின் றார்கள்; அன்னாருக்கும் கழகத்தின் சார்பில் நன்றியை செலுத்தி கொள்கிறோம்.

இந்த நூல் உருவாவதற்கு பொருளுதவி புரிந்த நம் கழக அன்பர்கள் அனைவருக்கும் நம் கழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

திருச்சிராப்பள்ளி. இங்ஙனம்,

11-12-92 தைலா. கோபால்சுவாமி

உ

சிவமயம்

திருவாரூர் நான்மணிமாலை

காப்பு

"நாடுங் கமலேசர் நான்மணிமா லைக்குமிகப்
பாடுங் கவிதைநலம் பாலிக்கும்-வீடொன்ற
முப்போ தகத்தின் முயல்வோர்க்கு முன்னிற்குங்
கைப்போ தகத்தின் கழல்"

காலை, பகல், மாலையாகிய மூன்று பொழுதுகளிலும் மனத்தில் வைத்து வழிபடுவோர்களுக்கு, வீடு பொருந்தத் துணை செய்கின்ற துதிக்கையையுடைய ஆனைமுகக் கடவுளின் திருவடிகள், யாவரும் தேடி அடைகின்ற கமலைக் கடவுளாகிய தியாகேசப் பெருமானது "நான்மணிமாலை" என்னும் இந் நூலுக்குப், பாடப்பெறுகின்ற செய்யுளுக்குரிய சொன்னலம் பொருணலமாகிய நலங்களை மிகுதியும் தந்தருளும்,

தலைவி இரங்கல். (நேரிசை வெண்பா)

"நீரூர்ந்த முந்நீர் நிலவலய நீள்கொடிஞ்சித்
தேரூர்ந்த செல்வத் தியாகனே—யாரூர
வீதிவிடங் காவடங்கா வேலைவிடம் போலுமதிப்
பாதிவிடங் காகடைக்கண் பார்த்து".

அலைகள் பொருந்திய கடலால் சூழப்பட்ட நிலவுலகத்தை, நீண்ட கொடிஞ்சி என்னும் உறுப்பினையுடைய தேராகச் செலுத்திய செல்வத் தியாகப்பெருமானே! திருவாரூரனே! வீதி விடங்கனே! கட்டுப்படாத திருப்பாற் கடலில் எழுந்த நஞ்சைப் போல அரைச்சந்திரன் கக்குகின்ற கதிர்களாகிய நஞ்சால் வருந்தும் என்னை, உனது கடைக்கண்ணால் பார்த்துக் காப்பாற்றியருளுவாயாக.

கட்டளைக் கலித்துறை

''பார்பெற்ற வல்லிக்கும் பாகீ ரதிக்குமெயப் பாதியமத்
தார்பெற்ற வேணியுந் தந்தார் தியாகர் தடம்புயத்தின்
சீர்பெற்றி லேமென்று நாணுல் வணங்கிச் சிலையெனவும்
பேர்பெற்ற தாற்பொன் மலைகுனித் தாரெம்
[பிரானெனன்பரே ''.2

எல்லா உலகங்களையும் ஈன்ற பூங்கொடி போன்ற உமையம்மைக்கு உடலிற் பாதியையும், கங்கைக்கு மாலையணிந்த சடையையும் இடமாகத்தந்த தியாகேசப் பெருமானது, அகன்ற திருத்தோள்களின் அழகை அடைந்தேனில்லையே என்று, அவரைப் பார்த்து நாணத்தால் தலைகுனிந்து, வில்லின் பெயராகிய சிலை என்பதனைத் தன்பெயராகவும் கொண்டு, மேருமலை யிருத்தலால், அதனை வளைத்தார் எமது பெருமானுரென்று பெரியோர் கூறுவர்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

'' என்பாக நகுதலையோ டெழிலாக
வணிந்தசம லேச மற்றுன்
றன்பாக மிடப்பாகத் தலைவிகரு
விழிதோய்ந்தும் தலைவி பாகத்
தன்பாக நின்றிருநோக் கவைநோய்ந்துந்
திருநிறம்வே றுகை யாலப்
பொன்பாக மிதுவெனவு நின்பாக
மிதுவெனவும் புகலோ ணுதே ''. 3

திருமேனியில் எலும்பையும், நகைக்கும் தலையையும், ஆமையோட்டையும் அழகு பொருந்த அணிந்திருக்கின்ற கமலேப் பெருமானே! உனது வலப்பாகத்தில் இடப்பாகத் தலைவியாகிய அம்மையினது கரிய விழிகள் படிந்தும், அம்மையினது இடப்பாகத்தில் உனது திருவிழிகள் அன்பு பொருந்தப் படிந்தும், உங்கள் இருவரது அழகிய நிறங்களும் கலப்புற்று வேறுபடுதலால், அப்பொன்னனைய பெருமாட்டியின் பாகம் இது என்றும், உனது பாகம் இது என்றும் சொல்ல வொண்ணுத நிலையில் உனது வடிவம் உள்ளது.

நேரிசையாசிரியப்பா

"ஒண்கதிர் பரப்புஞ் செங்கதிர்க் கடவுள்
வெயில்கண் டறியா வீங்கிருட் பிழம்பிற்
புயல்கண் படுக்கும் பூந்தண் பொதும்பிற்
காவலர்ப் பயந்து பாதபத் தொதுங்கிய்
விருவே றுருவிற் கருவிரன் மந்தி
பொன்னிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை
முன்னுறக் காண்டலு முளையெயி றிலங்க
மடித்தலத் திருத்தி வகிர்ந்துவள் ளுகிராற்
றெடுத்தபொற் சுளைபல வெடுத்துவாய் மடுப்பது
மானுட மடங்க றூணிடைத் தோன்றி
யாடகப் பெயரி னவணன்மார் பிடந்து
நீடுபைங் குடரி னிணங்கவர்ந் துண்டென
விறும்பூது பயக்கு நறும்பணை மருதத்
தந்த ணூரு ரெந்தையெம் பெரும
சிங்கஞ் சுமந்த செழுமணித் தவிசிற்
கங்குலும் பகலுங் கலந்தினி திருந்தாங்
கிடம்வலம் பொலிந்த விறைவியு நீயும்
நடுவண் வைகு நாகிளங் குழவியை
யொருவிரி னொருவி ருள்ளநெக் குருக
இருவிருந் தனித்தனி யேந்தினிர் தழீஇ
முச்சுடர் குளிர்ப்ப முறைமுறை நோக்கி
யுச்சி மோந்துமப் பச்சிளங் குழவி
நாறுசெங் குமுதத் தேயுலோ டொழுகும்
எழுதாக் கிளவியி னேழிசை பழுத்த
இழுமென் குரல மழலைத் தீஞ்சொற்
சுவையமு துண்ணுஞ் செவிகளுக் கையவென்
பொருளில் புன்மொழி போக்கி
யருள்பெற வமைந்ததோ ரற்புத முடைத்தே.

ஒள்ளிய கதிர்களைம் பரப்புகின்ற செஞ்ஞாயிற்றுக் கடவுளது வெயிலைப் பார்த்தறியாது, மிகுதியாகிய இருளின் திரட்சியில் மேகங்கள் நிலைத்துப் பொருந்துகின்ற, பூக்களையுடைய குளிர்ந்த சோலையின்கண். காவலாளர்க்கஞ்சி, மரங்களிடையே ஒதுங்கிய மனித உருவும் விலங்குருவும் ஆகிய இரண்டு வேறு வகைப்பட்ட உருவங்களையும் கரிய விரல்களையுமுடைய குரங்கு, பொன்னின் நிறம் பொருந்தப் பழுத்த பொலிவாகிய சுளைகளை யுடைய பலாப்பழத்தை முன்னிருக்கப் பார்த்ததும், முளையாணி போன்ற பற்கள் வெளிப்பட விருந்து. மடியின்மீது அப்பழத்தை எடுத்து வைத்து, கூரிய நகங்களால் பிளந்து, ஒன்றேடொன்று தொடர்புகொண்ட பொன்போன்ற சுளைகள் பலவற்றைப் பியத் தெடுத் துண்ணுங் காட்சி ; தூணினிடையே நரசிங்கப்பெருமான் தோன்றிப் பொன்னின் பெயரினனாகிய இரணியன் என்னும் அசுரனது வயிற்றைப் பிளந்து, நீண்ட பசிய குடரின் தசையை வலிந்தெடுத்து உண்டாற் போல, வியப்பைத் தருகின்ற, நல்ல வயல்களையுடைய மருத நிலம் சூழ்ந்த அழகிய தட்பமான திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற எமது தந்தையாகிய பெருமானே ! சிங்கங்கள் தாங்குகின்ற சிறந்த மணிகளிழைத்த பீடத்தில், இரவும் பகலும், ஒன்று சேர்ந்து இனிதாக இருந்ததைப் போல, இடம் வலமாக விளங்கிய அம்மையும் நீயும், உங்களிடையி லிருக்கும் பச்சிளங் குழந்தையாகிய முருகனை, ஒருவரின் ஒருவர் மனம் நெகிழ்ந்துருக இருவரும் தனித்தனியே கையில் ஏந்தியவர் களாய்த் தழுவி, உங்கள் திருக்கண்களாகிய மூன்று சுடர்களும் குளிர்ச்சியடைய, ஒருவரை ஒருவர் ஒப்ப மாறிமாறிப் பார்த்து, உச்சிமோந்து, அப்பச்சிளங் குழந்தையினது வாசனை வீசுகின்ற சிவந்த குவளை மலர்த்தேன் போன்ற வாய் நீரோடு ஒழுகுகின்ற, முதாக்கிளவியாகிய வேதத்தைப் போல ஏழிசை முதிர்ந்த, இனிய மெல்லிய ஒலியினவாகிய மதுரமிக்க மழலைச் சொற்களின் சுவை அமிழ்தத்தை உண்ணுகின்ற திருசெவிகளில், எனது பொருளற்ற புன்மொழிகளைச் செலுத்தி, நான் அருள்பெற அமைந்தாகிய நிலை, ஒப்பற்ற அற்புதமுடையதாகும், இஃது என்ன வியப்பு !

நேரிசை வெண்பா

"தேங்குபுக ழாரூர்த் தியாகர்க்கெண்டிக்குமொளி
வீங்கு பகற்போது வெண்படமாம் - தூங்கிருள்சூழ்
கங்குற் பொழுது கருப்படமாஞ் செம்படமாம்
பொங்குற்ற புன்மாலைப் போது". 5

செறிந்து உயர்த்த புகழையுடைய திருவாரூர்த் தியாகேசப் பெருமானுக்கு, எட்டுத் திசைகளிலும் ஒளிமிகுகின்ற பகற் பொழுது வெள்ளாடையாம். பேரிருள் பொருந்திய இராப் பொழுது கரிய ஆடையாம், விளக்கத்தையுடைய செவ்வந்திப் பொழுது செல்வாடையாம்.

கட்டளைக் கலித்துறை

"போதொன் றியதண் பொழிற்கம லேசர்பொன் [மார்பிலெந்தாய்
சூதொன்று கொங்கைச் சுவைடென்ப ரதற்றேல் [களிற்றுரிவை
மீதொன்றுவகண்டு வெங்கோப மாமுகன் [வெண்மருப்பா
லீதொன் றடுகளி றென்றெதிர் பாய்ந்த [விணைச்சுவடே". 6

பழமையான ஆனைத்தோல் மேலே பொருந்தியிருப்பதைப் பார்த்துக் கொடுங்கோபம் கொண்ட கரிமுகக் கடவுள், இஃதோர் கொல்களிறு என்று வெண்மையான கொம்புகளால் எதிரே பாய, அதனால் உண்டாகிய இருதழும்புகளைப், பூக்கள் பொருந்திய குளிர்ந்த சோலைகளையுடைய கமலைப் பெருமானது அழகிய திருமார்பில் கண்டு, எனது தாயாகிய உமையம்மையின் சூதாடு கருவியை ஒத்த முலைத்தழும்புகளென்று சொல்லுவர்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

'' இணங்குகம லாலயமா லிதயத்திற்
பொலிந்ததியா கேச ரப்பொற்
கணங்குழைமண் மகளிதய கமலத்தும்
பொலிதலினக் கமல மான
மணங்கமழ்பங் கயத்தடஞ்சூழ் கமலைகம
லாலயப்போர் வாய்த்த தான்மற்
றணங்கனையா ரிதயமுந்தம் மருட்கொழுந
ரிதயமுமொன் றுகுந் தானே ''. 7

இசைவாகிய தாமரை மலரிலிருக்கும் திருமகள் ஒடுங்குகின்ற திருமாலின் மனத்திற் பொலிந்த தியாகேசப் பெருமான், அழகிய நிறைந்த பொன்னணிகளையுடைய நிலமகளினது மனத்தாமரையினிடத்தும் விளங்குதலால், அம்மனத்தாமரையாகிய வாசனை வீசுகின்ற தாமரைக் குளங்கள் சூழ்ந்த திருவாரூர், கமலாலயமென்னும பெயரைப் பெற்றது, தெய்வப் பெண்களையொத்த மங்கையர்களது உள்ளமும், அவர்களது அன்புடைய கணவர்களது உள்ளமும் ஒன்றுகவே இருக்கும்,

நேரிசையாசிரியப்பா

தானமால் களிறு மாநிதிக் குவையு
மேனைய பிறவு மீகுந ரீக
நலம்பா டின்றி நாண்டுறந் தொரீஇ
யிலம்பா டலைப்ப யேற்குந ரேற்க
புரவலர் புரத்தலு மிரவல ரிரத்தலு
மிருவே றியற்கையு மிவ்வுல குடைத்தே

அதாஅன்று

ஒருகா லத்தி லுருவமற் றென்றே
யிடப்பான் முப்பத் திரண்டறம் வளர்ப்ப
வலம்பா லிரத்தன் மாநிலத் தின்றே
விண்டோட நிவந்த வியன்றுகிற் கொடிகள்

மண்டலம் போழ்ந்து மதியக டுடைப்ப
வாணிலா வமுதம் வழங்கியக் கொடிகள்
வேனிலிற் பயின்ற வெப்பம தாற்றுபு
கொடியா ரெத்துணைக் கொடுமை செய்யினு
மதியார் செய்திடு முதவியை யுணர்த்தும்
பன்மணி மாடப் பொன்மதிற் கமலைக்
கடிநகர் வைப்பினிற் கண்டேம்
வடிவ மற்றிது வாழிய பெரிதே. 8

மதத்தையுடைய பெரிய யானைகளையும், பெருஞ் செல்வத்திரளையும் பிறவற்றையும் ஈவோர் ஈயக் கடவர். நன்மையுண்டாதலில்லாமல் நாணத்தை விட்டு விலகி, வறுமைநீங்க இரப்போர் இரக்கக் கடவர் ஈகையாளர் ஈதலும், ஏற்போர் ஏற்றலும் ஆகிய இருவேறு வகைப்பட்ட இயற்கைகளையும் இவ்வுலகம் உடையது அஃதல்லாமல் ஒரே காலத்தில் ஒருருவமே இடது பக்கம் முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்க, வலது பக்கம் இரத்தல் பெரிய நிலவுலகில் இல்லையன்றோ? இத்தகைய வடிவம் ஒன்றை, வானைத்தொட உயர்ந்த மேலாகிய துணியாற் செய்யப் பெற்ற கொடிகள், அவ்வான மண்டலத்தைப் பிளந்து சென்று சந்திரனின் வயிற்றைக் கிழிக்க, ஒள்ளிய நிலவமிழ்தத்தை வழங்கி, அக்கொடிகள் வேனிலாலடைந்த வெப்பத்தை மாற்றிக் கொடியவர் எத்துணைத் துன்பத்தைச் செய்யினும், மதியுடையார் அவற்றைப் பொருட்படுத்தாது செய்யும் உதவியை உணர்த்துகின்ற பல மணி மாடங்களையும், பொன் மதிலையுமுடைய திருவாரூர் என்னும் காவல் பொருந்திய நகரினிடத்துக் கண்டோம், இவ்வடிவம் நீடு வாழ்வதாக.

நேரிசை வெண்பா.

பெருமான் றமிழ்க்கமலைப் பெம்மான்கை மானுங்
கருமா னுரியதளுங் கச்சு - மொருமானுஞ்
சங்கத் தடங்காதுந் தார்மார்புங் கண்டக்கா
லங்கத் தடங்கா தவா. 9

பெருமானும், தமிழ்க் கமலைக் பெம்மானுமாகிய இறைவனது திருக்கையிலுள்ள மானையும், கரிய யானைத் தோலையும் பாம்பாகிய இடைக்கச்சையும், ஒப்பற்ற மான்போன்ற உமையம்மையையும், சங்க குண்டலங்களையணிந்த அகன்ற காதுகளையும், மாலை அணிந்த மார்பையும் பார்த்தால், காதல் உடலினுள் அடங்கி நிற்கமாட்டாது.

கட்டளைக் கலித்துறை

வாவியம் போருகஞ் சூழ்கம லேசர்புள் வாய்கிழித்த
தூவியம் போருகந் தோறுநின் றோர்துணைத் தாளடைந்த
ஆவியம் போருகந் தாயிரங் கூற்றுடன் றுலுமஞ்சேல்
நாவியம் போருக நன்னெஞ்ச மேயவர் நாமங்களே, 10

தாமரைக் குளங்கள் சூழ்ந்த கமலைக் கடவுளும், கஞ்சன் விடுத்த கொக்குப் பறவையின் வாயைக் கிழித்த திருமாலாகிய இறகம்பை உடையவரும், ஊழிதோறும் நிலைபெற்றிருக்கின்றவரும் ஆகிய தியாகேசப் பெருமானது துணை செய்கின்ற திருவடிகளை யடைந்த உயிரே! ஆயிரம் கூற்றுவர்கள் போரிட விரும்பி எதிர்ப்பினும் பயப்படாதே. நாவே! அவரது திருப்பெயர்களை நவின்று கொண்டிருப்பாயாக நல்ல மனமே! அவரை நினைத்துக் கொண்டிருப்பாயாக.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

நாம வேற்படைக் கடவுளைப்
பயந்தரு ணங்கைதென் கமலேசர்
வாம பாகத்தைக் கொளவலப்
பாகநீர் மங்கைகொண் டனள்போலாந்

தரம நீற்றெளி தன்னிறங்
காட்டவெண் டலைநிரை நுரைகாட்டக்
காமர் பூங்கொடி மடந்தையர்
மதர்விழிக் கயலுலா வரலாலே 11

அஞ்சத் தக்க வேற்படைக் கடவுளாகிய முருகனைப் பெற்றருளிய உமை நங்கையார் தென் கமலைக் கிறைவரது திருவுருவத்து இடப்பாகத்தைக் கொண்டுவிட, நேர்மையாகிய திருநீற்றின் ஒளி தன் வண்ணத்தைக் காட்டவும், வெள்ளியதலை மாலை நுரையைக் காட்டவும், அழகிய பூங்கொடி போன்ற பெண்களது மதர்த்த கண்களாகிய மீன்கள் பொருந்தி இயங்கவும் இருந்தலால், அவரது வலப்பாகத்தையும் கங்கை மங்கை அடைந்தனள் போலும்.

[நேரிசையாசிரியப்பா]

வருமுலை சுமந்து வாங்கிய நுசுப்பிற்
புரிகுழன் மடந்தையர் பொன்னெடு மாடத்
தொண்கதிர் வயிரமுந் தண்கதிர் நீலமுஞ்
சேயொளி பரப்புஞ் செம்மணிக் குழாமும்
மாயிரு டிரந்து மழகதி ரெறிபபன
சுரநதி முதல வரநதி மூன்றுந்
திருவநீண் மறுகிற் செல்வது கடுப்ப
வொள்ளொளி ததும்பு மொண்டமிழ்க் கமலைத்
தெள்ளமு திறைக்குந் திங்களங் கண்ணித்
தீநிறக் கடவுணின் கான்முறை வணங்குதும்.
கூற்றெனப் பெயரிய கொடுந்தொழி னுளையன்
ஊற்றமில் யாக்கை யுவர்நீர்க் கேணிப்
புலத்தலை யுயிர்மீ னலைத்தனன் பிடிப்ப
ஐவளி பித்தென வமைத்துவைத் திருந்த
முத்தலைத் தூண்டி றூண்டி யத்தலை
வாழ்நாண் மிதப்பு நோக்கித் தாழா

தயிறலைத் தொடங்கி யெயிறலைத் திருத்தலிற்
றள்ளா முயற்சி தவறுபட் டொழிந்தென
வெள்குறீஇ மற்றவன் விம்மித னுக
அருட்பெருங் கடலினவ் வாருயிர் மீனங்

கருக்குழி கழியப பாய்ந்து தெரிப்பரும்
மரமா னந்தத் திரையொடு முலாவி
எய்தரும் பெருமித மெய்த
ஐயநின் சுடைக்க ணருளுதி யெனவே. 12

வளர்கின்ற முலைகளைச் சுமந்து, வளைந்த இடையையும், பின்னலுற்ற கூந்தலையுமுடைய பெண்கள் உறைகின்ற பெரிய பொன் மாடங்களில் ஒளளொளி உடைய வயிரமும், தண்ணொளி யுடைய நீலமும். செவ்வொளி பரப்புகின்ற உயர்ந்த மாணிக் கமும், பேரிருளை விலக்கி இளங்தரைப் பரப்புவது வெண்மை யாகிய கங்கையாறு முதலாகக் கருமையாகிய யமுனையாறும் செம்மையாகிய சோணையாறும் என்று சொல்லப்படுகின்ற வேண்டுவ ஈயும் ஆறுகள் மூன்றும் சிறந்த அழகிய நீண்ட தெருவில் செல்வதை ஒப்பப் பேரொளி பொங்குகின்ற ஒள்ளிய தமிழ்க் கமலையில், தெள்ளிய அமிழ்தத்தைக் கொட்டுகின்ற அழகிய திங்கட் கண்ணியையுடைய தீவண்ணக் கடவுளே! கூற்றுவனென்னும் பெயரை உடைய கொடுந் தொழிலாளனுகிய வலைஞன், வலிமையற்ற உடலாகிய உவர்நீர்க் கிணற்றினிடத்து, உயிராகிய மீனை வருத்திப் பிடிப்பதற்குச் சிலேத்துமம், வாதம் பித்தம் என ஆக்கி வைத்திருக்கின்ற மூன்று தலைகளை உடைய தூண்டிலை எடுத்து, அதனிடத்து வாழ்நாளாகிய மிதப்பைப் பார்த்து, காலந்தாழ்க்காது தின்னத் தொடங்கியப் பற்களைக் கடித்து நிற்றலில், தவருத முயற்சி பிழைபட் டொழிந்ததே என்று வெட்கி, வியப்புடையவனுகும்படி, உனது பேரருட் கடலில் அந்த அரிய உயிராகிய மீன் பிறவிக்குழி ஒழியக் பாய்ந்து

உணர்தற்கரிய பேரின்பமாகிய அலைகளோடு உலாவி, அடைத கரிய பெருமிதத்தை யடையுமாறு நினது கடைக்கண்ணே கத்தை அருளுவாயாக! என்று வணங்கி திருவடிகளை முறைே வழிபடுகின்ருேம்.

நேரிசை வெண்பா

என்பணிந்த தென்கமலை யீசனார் பூங்கோயில்
முன்பணிந்த தெய்வ முனிவோர்க-ளன்பென்னும்
புண்சுமந்தோ நந்தி புடைத்தென்னுர் புண்ணியனுர்
மண்சுமந்தா ரென்றுருகு வர். 13

எலும்புகளை யணிந்த தென்கமலைக் கடவுளது பூங்கோயில முன்னே வணங்கிய தெய்வ முனிவர்கள், நந்தியம்பெருமானடிக் அதனுற் புண்ணை அடைந்தோமென்று சொல்ல மாட்டார்கள் புண்ணியராகிய புற்றிடங் கொண்டார் பிரம்படி பட்டதோடு மண்ணையும சுமந்தாரென்று மனம் நெகிழ்வார்கள் இவர்களத அன்பிருந்தவாறென்னே!

கட்டளைக் கலித்துறை

வரந்தந் தருள வாதம்வைத் தாலென் வரதமிடக்
கரந்தந்த தா லிவர் கையதன் றேபலி காதலித்துச்
சிரந்தந்த செங்கைக் கமலேசர் நாமக் தியாகரென்ப
தரந்தந்த வாள்விழி யாடந்த தாங்கொ
[லறம்வளர்தே. 14

வேண்டுவனவற்றை ஈந்தருளுவதற்கு உரிய ஈகைக் குறிப் புணர்த்தும் கையை, வைத்திருப்பதால் என்ன பயன்? கொடையை இடக்கரம் கொடுத்தது, அவ்விடக்கரம் இவருடையதன்று, பிச்சையை விரும்பித் தலையோட்டை யேந்திய சிவந்த கையை உடைய கமலைக் கடவுளது பெயர் தீயாகேசர் என்று சொல்லப் படுவது, அராவப் பெற்ற வாள் போன்ற கண்ணையுடைய உமையம்மையார் அறம் வளர்த்ததாற் கிடைத்ததோ?

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

வள்ளமுலைக் கலைமடந்தை மகிழ்நர்தலை
மாலைசிர மாலை யாகக்
கொள்ளுவது மலர்மடந்தை கொழுநர்தலை
கிண்கிணியாக் கோத்துச் சாத்த
உள்ளுவது மொழிவதுமற் றொழியாயே
லடிமுடிக ளுணர்ந்தே மென்றே
கள்ளமொழி வான்புகிற்றென் கமலேச
வவர்க் கவையே கரியு மாமே. 15

தென்கமலைக்கிறைவனே! கிண்ணம் போன்ற முலைகளையுடைய கலைமகளது மகிழ்ச்சிக்குரிய பிரமனது தலைமாலையைச் சிரமாலையாகக் கொள்ளுவதும், செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற திருமகளது கொழுநனுகிய திருமாலினது தலையைச் சதங்கையாகக் கோத்து அணிய நினைப்பதும் உன்னல் விலக்கத்தக்கனவாகும். அவ்வாறு விலக்காயாயின், உனது அடிமுடிகளை அறிந்தோமென்று அவர்கள் பொய்மொழி புகலப் புகுந்தார்களாயின், அவர்களுக்கு அம்மாலைகளே சான்று பகருவனவாம்.

நேரிசையாசிரியப்பா

கருந்தாது கடுத்த பெரும்பணை தாங்கும்
படர்மருப பெருமைபைங் குவளை குதட்டி
மடிமடை திறந்து வழிந்தபா லருவி
கரைபொரு தலைப்பப் பெருகுபூந் தடத்து
வெண்டோ டவிழ்த்த முண்டகத் தவிசிற்
பானீர் பிரித்துண் டுவெள் ளெகினம்
நூற்பெருங் கடலு ளுண்பொரு டெரித்து
நாற்பயன் கொள்ளு நாமகட் பொருவு
மென்பான் மருதத் தண்புனற் கமலைத்
தென்பான் மேருவிற் றிகழும் கோயில்

மூவ ரகண்ட மூர்த்தியென் றேத்துந்
தேவ ரகண்ட தெய்வ நாயக
நின்னடித் தொழும்பி னிலைமையின் றேனுநின்
றன்னடித் தொழும்பர் சார்புபெற் றுயதலிற்
சிறியவென் விழுமந் தீர்ப்பது கடனென
வறியா யல்லை யறிந்துவைத் திருந்துந்
தீரா வஞ்சத் தீப்பிறப் பலைப்பச்
சோரா நின்றவென் றுயரொழித் தருள்கிலை
புறக்கணித் திருந்ததை யன்றே குறித்திடிற்
கோள்வாய் முனிவர் சாபநீர்ப் பிறந்த
தீவாய் வல்வினைத் தீப்பயன் கொண்மா
ருடல்சுமந் துழலுமக் கடவுளர்க் கல்லதைப்
பிறவியின் றுயர்நினக் கறிவரி தாகலி
னருளா தொழிந்தனை போலுங்
கருணையிற் பொலிந்த கண்ணுதலோயே. 16

கரிய இரும்பை ஒத்த மிகுந்த பருமை வாய்ந்த, விரிந்த கொம்புகளையுடைய எருமைகள் பசிய குவளை மலர்களை மென்று, மடியாகிய மடையைத் திறக்க வழிந்த பாலருவியானது கரையை மோதி அலைக்க, நிறைந்த பூக்களையுடைய தடாகத்தில் வெள்ளிய இதழ்களை விரித்த தாமரை இருக்கையில் பாலையும், நீரையும் வேறு பிரித்து உண்ணுகின்ற தூயவெண்மையாகிய அன்னங்கள், பெரிய கலைக்கடலுள்ளே நுட்பமாகிய பொருள்களை ஆராய்ந்து. அறம், பொருளின்பம் வீடாகிய நான்கு பயன்களையும் அடைகின்ற நாமகளை ஒத்திருக்கின்ற, மென்மைத் தன்மையை உடைய மருதநிலம் சூழ்ந்த தண்ணீர் வளமுடைய கமலையில், தென்திசை மேருவைப் போலத் திகழ்கின்ற பூங்கோயிலின் கண்அயன், அரி. அரன் என்னும் மூவரும் நிறையுருவனென்று வழிபடுகின்ற, தேவரகண்டன் என்னும் திருப்பெயரை உடையவனே! கருணையிற் பொலிந்த நெற்றிக்கண்ணை உடையவனே! தெய்வநாயனே! உனது திருவடித் தொண்டிற்குரிய தகுதியில்லையாயினும், உனது அடித்தொண்டர்களது பற்றை அடைந்து

உய்திபெறுதலிற், சிறியவனுகிய எனது துன்பத்தை நீக்குவது உன் கடன் என்பதை நீ அறியாததில்லே. அவ்வாறறிந் திருந்தும் நீங்காத வஞ்சத்தை உடைய கொடிய பிறவி, என்னை வருத்த அதனுற் சோர்வடைகின்ற எனது துன்பத்தை ஒழித் தருள்கின்ருயில்லே, இச்செயல் என்னைப் புறக்கணித்திருந்த தாகாது. எண்ணும் பொழுது, நிறைமொழியுடைய முனிவர் களது வெகுளுரையாற் பிறவியடைந்தவர்களும், தீமைவாய்ந்த கொடுவினைப் பயனை நுகர்கின்றவர்களும் உடலைத் தாங்கி உழலுகின்றவர்களுமாகிய திருமால் முதலிய தேவர்களுக் கல்லாமல், பிறப்புத்துன்பம் உனக்கு அறிய முடியாதாகலின், அருள் செய்யாதிருந்தாய் போலும்.

நேரிசை வெண்பா

கண்ணனூர் பொய்ச்சூள் கடைப்பிடித்தோ
[தென்புலத்தா
ரண்ணலா ரஞ்சுவரென் றஞ்சியோ-விண்ணோர்
விருந்தாடு மாரூரா மென்மலர்த்தா டூக்கா
திருந்தாடு கின்றவா வென். 17

தேவர்கள் புதிது புதிதாக வந்து கூடுகின்ற திருவாரூர்ப் பெருமானே! திருமாலினது பொய் வஞ்சினத்தை எண்ணியோ; தென்றிசைத் தலைவனுகிய இயமன் அஞ்சுவானென்று கருதியோ? மெல்லிய மலர் போன்ற திருவடிகளைத் தூக்காமல் இருந்தாடு கின்ற காரணம் என்ன?

கட்டளைக்கலித்துறை

என்னுயிர்க் கொக்கு மிளஞ்சேயொ
டேழுல கீன்றவன்னை
மன்னுயிர்க் கொக்குங் கமலைப்
பிரான்மணி கண்டங்கண்டு

மின்னுயிர்க் குய்புய லென்றுமென்
கொன்றைபைந் தாதுயிர்க்கப்
பொன்னுயிர்க் கொண்கன் பொலன்றுகி
லாமெந்தை பூந்துகிலே. 1

எனது உயிரை ஒத்த இளங்குழவியாகிய முருகனோடு ஏழுலகத்தையும் பெற்ற அம்மையினது, சிறந்த உயிர்போன் கமலைப் பெருமானின் அழகிய கழுத்தைப் பார்த்து, மின் வீசுகின்ற மேகமென்று, மெல்லிய கொன்றை மலர்கள் பசிய மகரந்தத்தைச் சொரிய, அது சிந்திய எமது தந்தையினது பொல வுடைய தோலாடை, திருமகளது உயிர்த் தலைவனாகிய திருமாலின் பொன்னுடையாயிற்று.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

பூமாதி னிதயகம லத்து வைகும்
பொலிவானு மரியணைமேற் புணரியீன்ற
மாமாது வழிபடவீற் றிருத்த லானு
மறை முதலு நடுமுதலு முடிவி னின்ற
தாமாத றெளிவிப்பார் போலு நீலத்
தரங்நெடுங் கடன்ஞால மொருங்கு வாய்த்த
கோமாது மனங்குழையக் குழைந்த வாரூர்க்
குழகனார் கிண்கிணிக்கா லழக னாரே. 19

கரிய அலைகளை உடைய நீண்ட கடல் சூழ்ந்த, உலக முழுவதையும் பெற்ற மலையரையன் மகளது மனம் நெகிழக் குழைந்த திருவாரூர் இளைஞராகிய கிண்கிணிக்காலழர், மண் மகளது மனத்தாரையில் பொருந்திக் கமலாசனனை இருக்கின்ற விளக்கத்தினாலும், அரியணையில் திருப்பாற் கடல் பெற்ற திருமகள் வழிபட வீற்றிருத்தலாலும், வேத முதல்வனாகிய நான் முகனும், காத்தற் கடவுளாகிய திருமாலும், சர்வசங்கார காலத்தில் நிலை பெற்றிருக்கின்ற, தாமே யாதலை உலகிற்குத் தெளியச் செய்வார் போலும்!

நேரிசையாசிரியப்பா

அழலவிர் சோதி முழுவெயி லெறிப்ப
விளநில வெறிக்குங் குளிர்மதிக் குழவியும்
வெஞ்சினம் பொதிந்த நஞ்சுமிழ் பகுவாய்
வெள்ளைமுள் ளெயிற்றுப் பிள்ளைவா ளரவுந்
தெண்டிரை கொழிக்குந் தீம்பனற் கங்கைத்
தண்டுறை மருங்கிற் றனிவிளை யாட
வுடன்வைத் தாற்றிய படர்சடைக் கடவு
ளெறுழ்வலித் தறுகட் டெறுசினக் கேழன்
முளையெயி றிலங்க முருகுகொப் பளித்துத்
தளையவி ழிதழித் தண்டார் மார்ப
திருவிழி யிரண்டினு மிருசுடர் வழங்கலி
னிரவுநன் பகலு மொருபுடை கிடந்தெனக்
கடங்கலுழ் கரடத் தடங்களிற் றுரிவையும்
மடங்கலீ ருரியு முடன்கிடந் தலமர
விண்பட நிவந்த திண்பு யாசல
நெட்டிலைக் கமுகி னெடுங்கயி றூர்த்துக்
கட்டுபொன் னூசல் கன்னிய ராடவப்
பைங்குலைக் கமுகு பழக்காய் சிந்த
வெண்கதிர் நித்திலம் வெடித்துகு தோற்றங்
கந்தரத் தழகு கவர்ந்தன விவையென
வந்தி லாங்கவ ரார்த்தன ரலைப்ப
வொண்மிட றுடைந்தாங் குதிரஞ் சிந்தக்
கண்முத் துகுத்துக் கலுழ்வது கடுக்குந்
தண்டலை யுடுத்த வொண்டமிழ்க் கமலைப்
பொற்பதி புரக்கு மற்புதக் கூத்தநின்
சேவடிக் கொன்றிது செப்புவன் கேண்மதி
விலங்கினுண் மிக்கது விண்ணவர் தருவென

வொருங்குவைத் தெண்ணுவ தோர் வழக்கன்மையி
ஞெத்த சாதியினுயர்புமற் றிழிபும்
வைத்தன ரல்லதை வகுத்தனர் யாரே
யாருயிர்க் கமைத்த வோரெழு பிறப்பினுண்
முற்படு தேவருண் முதல்வனென் றெடுத்துக்
கற்பனே கடந்த கடவுணிற் பழிச்சுதுந்
தொன்மறைக் குலங்கண் முன்னிய தியாதெனப்
பன்முறை தெரிப்பினும் பயன்கொள வரிதாற்
றேவரி ஞெருவனென் றியாவரு மருளுற
நீயே நின்னலே நிகழாது மறைத்துக்
கூறிய தாகு மாகலிற்
றேறின்ர் மறைஞெச் செப்பினர் நன்கே.

வெப்பத்தைத் தருகின்ற சூரியன், மிகுதியாகிய வெயிலே வீச, மெல்லிய நிலவை வீசுகின்ற குளிர்ந்த பிறைச் சந்திரனும், கொடுங்கோபம் கொண்ட நஞ்சைக் கக்குகின்ற பிளவுபட்ட வாயையும், வெள்ளிய முள்ளாணி போன்ற பற்களேயுமுடைய நீண்ட பாம்புக் குட்டியும், தெள்ளிய அலேகொழிக்கின்ற இனிய தண்ணீரையுடைய கங்கைக் கரைப் பக்கத்தில் தனித்து விளையாடும்படி சேர்த்து வைத்துப் பகை தணித்தாற்றுகின்ற விரிந்த சடையை உடைய கடவுளே! பேராற்றலேயும், அஞ்சாமையையும். கொல்லுகின்ற கோபத்தையுமுடைய பன்றியானது முளேத்த கொம்புகள் விளங்க, மணம் ததும்பி இதழ்கள் அவிழ்ந்த தண்ணிய மலர் மாலேயை அணிந்த மார்பை உடையவனே! இருதிருக்கண்களிலும் சந்திர சூரியராகிய இருசுடர்கள் ஒளி செய்தலால் இரவும், பகலும் ஓரிடத்து இருந்தாற் போல மத நீரொழுகுகின்ற கொழுத்த பெரிய யானேத்தோலும், சிங்கத்தை உரித்த தோலும் அருகிலிருந்து அசைய, வானேத்தொட உயர்ந்த புயமலேகளே உடையவனே! நெடிய இலேகளே உடைய கமுக மரத்தில், நீண்ட கயிறுகளால் இறுக்கிக் கட்டப்பட்ட பொன்னூசலில் மங்கையர்கள் ஆட, அந்தப் பசிய குலேகளே உடைய கமுக மரத்திலிருந்து பழுத்த காய்கள் கீழே சிந்த, வெள்ளொளி

உடைய முத்துக்கள் வெடித்து வீழ்கின்ற காட்சி; கழுத்தின் அழகை இக்கமுக மரங்கள் கவர்ந்து கொண்டன என்று, அம்மரத்தை அவர்கள் கட்டி யலைக்க ஒள்ளிய கழுத்து ஒடிந்து குருதி சிந்திக், கண்ணீராகிய முத்துக்களைச் சொரிந்து அழுவதை ஒக்கின்ற சோலை சூழ்ந்த, ஒள்ளிய தமிழ்க் கமலையாகிய அழகிய நகரத்தைப் புரக்கின்ற அற்புதக் கூத்தனே! நினது செவ்விய திருவடிகளுக்கு இவ்வொன்று சொல்லுவேன். கேட்பாயாக! நிலவுலக விலங்குகளைக் காட்டிலும் விண்ணுலகத்துள்ள மரங்கள் உயர்ந்தன என்று ஒருங்கு வைத்து ஒப்பிட்டுப் பார்த்தல் வழக்கன்மையால், ஒத்த பிறப்பில் உயர்வு தாழ்வு குறித்தார் களல்லாமல், வெவ்வேறு பிறப்புப் பொருள்களை ஒன்றோ டொன்று உயர்வு தாழ்வு குறிக்குமாறு ஏற்படுத்தியவர் யார்? அரிய உயிர்களுக்கமைந்த எழுவகைப் பிறப்புக்களுள், முற்பட்ட தாகிய தேவர்களுக்குள்ளே முதல்வன் என்று; கற்பனை கடந்த கடவுளாகிய உன்னை எடுத்து வணங்குவோம். பழைய வேத நூல்கள் குறித்தது, யாதென்று பலமுறை ஆராயினும் பயனடைய முடியாத தாயிருக்கின்றது. தேவர்களுள் ஒருவன் என்று, எல்லோரும் மயங்க, நீயே உன்னுடைய தன்மை விளங்காமல் மறைத்துக் கூறியது வேத மாதலின், அதனை மறை என்று அறிந்தோர் கூறினர்,

நேரிசை வெண்பா

நல்லார் தொழுங்கமலை நாதனே நாதனெனக்
கல்லாதார் சொல்லுங் கடாவிற்கு — வெல்லும்
விடையே விடையாக மெய்யுணரா ரையுற்
றிடையே மயங்குமிது வென். 21

நல்லவர்கள் வழிபடுகின்ற கமலைப் பெருமானே முதற் கடவுளென்று, படியாதார் கேட்கும் வினாவென்னும் கடாவை வெல்லும் விடையாக, ஊர்தியாகிய திருமாலேயிருக்க, உண்மை யறியாதார் ஐயமுற்று இடையில் மயங்குகின்ற இது என்ன காரணம்?

கட்டளைக் கலித்துறை

இதுவே பொருளென் றெவரெவர் கூறினு
[மேற்பதெது
வதுவே பொருளென் றறிந்துகொண் டேனப்
[பொருளெவர்க்குப்
பொதுவேயென் ருலும் பொருந்துமெல் லோர்க்கும்
[பொதுவினிற்கு
மதுவேய் மலர்ப்பொழி லாரூரி னும்வைகும்
[வைகலுமே. 22

இதுதான் மெய்ப்பொருளென்று யார் யார் எதை எதைக் கூறினும் ஏற்றுக் கொள்வது எதுவோ; அதுவே மெய்ப் பொருளாகுமென அறிந்தேன். அம்மெய்ப் பொருள் யாருக்கும் பொதுவானது என்று சொன்னாலும் பொருந்துகின்ற நிலையில், எல்லோர்க்கும் பொதுவாகிய திருவம்பலத்தில் நிலைபெற்று இருக்கும் தேன் பொருந்திய பூஞ்சோலைகளை உடைய திருவாரூரிலும் தினந்தோறும் வீற்றிருக்கும்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

வைய முழுது முழுதுண்ண
வல்லாற் களித்து நவநிதியுங்
கையி லொருவற் களித்தெமக்கே
சதிவீ டளித்தோர் கன்னிகைக்கு
மெய்யி லொருகூ றளித்தனரால்
விமலர் கமலைத் தியாகரென்ப
தைய ரிவர்க்கே தகுமுகம
னன்று புகழு மன்றுமே. 23

நில முழுவதையும் உழுதுண்ணும் வலிமை உடையவனாகிய திருமாலுக்கு ஈந்து, சங்கம், பதுமம், மகாபதுமம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரம் என்பனவாகிய ஒன்பது செல்வங்களையும் குபேரனுக்குக் கைகளிற் கொடுத்து, எங்களுக்கு முத்தியாகிய வீட்டைத் தந்து, ஒப்பற்ற பெண்மகளாகிய உமாதேவிக்கு உடலில் ஒரு பாதியைக் கமலை விமலர் கொடுத்துள்ளார் ஆதலால் தியாகேசர் என்னுந் திருநாமம், தலைவராகிய இவருக்கே ஏற்றது. இப்பெயர் உபசாரப் பெயருமில்லை, புகழ்ப் பெயருமில்லை.

நேரிசையாசிரியப்பா

ஆமையோ டணிந்து தலையோ டேந்திக்
காமரு மடந்தையர் கடைதொறுங் கடைதொறும்
பலிதேர்ந் துண்ணினு முண்ணு மொலிகழற்
பைந்துழாய் முகிலும் பழமறை விரிஞ்சனு
மிந்திரா தியரு மிறைஞ்சினர் நிற்ப
மற்றவர் பதங்கண் மாற்றியும் வழங்கியும்
பற்றலர்ச் செகுத்து முற்றவர்த் தாங்கியும்
பரசுநர் பரசப் பணிகுநர் பணிய
வரசுவீற் றிருப்பினு மிருக்கு முரைசெயின்
யோக சாதனம் போகிகட் கின்மையிற்
செஞ்சடை விரித்து வெண்பொடி பூசி
யெருக்கங் கண்ணியுஞ் சூடி விருப்புடை
யிடப்பான் மடந்தை நொடிப்போழ்து தணப்பினு
மடலூர் குறிப்புத் தோன்ற விடலருங்
காமமீ தூர வேமுற் றிரந்தவ
டாமரைச் சீறடி தைவந் தம்ம
புலவியிற் புலந்துங் கலவியிற் களித்தும்
போகமார்ந் திருப்பினு மிருக்கும் போகிகட்
கெய்தா வொண்பொருள் கைவந்து கிடைப்ப

ஞான முத்திரை சாத்தி மோனமோ
டியோகுசெய் திருப்பினு மிருக்கு மீகெழு
தமனிய மாடத் தரமிய முற்றத்
தைங்கணைக் கிழவ னரசிய னடாத்தக்
கொங்கைமால் களிறுங் கொலைக் கண்வாட்
சில்கா ழல்குல் வெல்கொடித் தேரும் [படையுஞ்
பல்வகை யுறுப்பும் படையுறுப் பாகப்
பவக்குறும் பெறியுந் தவக்குறும் பெறிந்து
நுணங்கிய நுசுப்பி னணங்க ஞர் குழுமிக்
கைவகுத் திருந்து கழங்கெறிந் தாட
மையுண் கண்கண் மறிந்தெழுந் தலமரல்
செம்முகத் தாமரைச் சிறையளிக் குலங்க
ளம்மென் காந்தளி னளிக்குல மார்த்தெழக்
கலந்துமன் றழீஇக் காமுற னிகர்க்கும்
பொலன்செய் வீதிப் பொன்மதிற் கமலை
யண்ணன் மாநகர் கண்ணுதற் கடவுள்
கற்பனை கழன்று நிற்றலி
னிற்பதிந் நிலையெனு நியமமோ வின்றே. 24

மேலே உயர்ந்த பொன்மாடங்களின் நிலாமுற்றத்தில், ஐங்கணை உரிமையாளனாகிய மன்மதன் தனது அரசியலை நடத்த, முலைகளாகிய பெரிய யானைகளும், கொலை செய்கின்ற கண்களாகிய வாட்படைகளும், சிலமணிக் கோவை யணிந்த அல்குலாகிய வெற்றிக் கொடியை உடையதேரும், பிறபல வகை உறுப்புக்களும், படைக்கருவிகளாகக் கொண்டு, பிறவித் தீங்கைத் தவிர்க்கும் தவமாகிய அரணைக் குலைக்கின்ற, நுட்பமாகிய இடையை உடையதேவ மகளிரனைய பெண்கள் கூடிப், பகுதி பிரித்திருந்து பந்து வீசியாட, மையுண்ட விழிகள் பந்தை நோக்கிச் சென்று திரும்பிச் சுழலுதல் செவ்விய இதழ்களை உடைய தாமரையில் இருக்கின்ற சிறகுகளை உடைய

வண்டுக் கூட்டங்களும், அழகிய மெல்லிய காந்தட் பூவிலிருக்கின்ற வண்டுக் கூட்டங்களும் இரைந்து எழும்பக்கலந்து, ஒன்ருேடொன்று கூடி விரும்புதலை ஒக்கின்ற அழகாக அமைக்கப் பெற்ற வீதிகளேயும், அழகிய மதிலேயுமுடைய கமலேயாகிய பெரிய சிறந்த நகரிலிருக்கின்ற, நெற்றிக்கண்ணை உடைய கடவுள் திருமாலாகிய ஆமையின் ஓட்டை அணிந்து நான்முகனது தலை ஓட்டைக் கையிலேந்தி. அழகிய பெண்களிடத்து வாயில் தோறும், வாயில் தோறும் பிச்சை எடுத்து உண்ணினும் உண்ணுவர், ஒலிக்கின்ற வீரக்கழலேயும் பசிய துழாய் மாலேயையும் அணிந்த மேகமனேய திருமாலும் பழைய வேதத்தையறிந்த நான்முகனும், இந்திரன் முதலானேரும் தொழுதவர்களாய் நிற்க, அவர்களது பதவிகளே மாற்றியும் கொடுத்தும் அன்பற்ருரை ஒழித்தும், அன்புற்ருரைப் புரந்தும், துதிப்போர் துதிக்கவும், பணிவோர் பணியவும் அரசு வீற்றிருப்பினுமிருப்பர். பேசுங்கால் யோகத்திற்குரிய கருவிகள் போகிகட்கில்லா திருந்தும், செம்மையாகிய சடையை விரித்து, வெண்மையாகிய திருநீற்றைப் பூசி, வெள்ளெருக்க மாலையை யணிந்து காதலுடைய இடப் பக்கத்து மங்கையாகிய உமையம்மை ஒருநொடிப் பொழுது நீங்கினுலும் மடலூர்தற்குரிய குறிப்பு வெளிப்படத், தவிர்தற்கரிய ஆசை மிகமயங்கி இரந்து, அவளது செந்தாமரை போன்ற சிறந்த பாதங்களே வருடிப், புலவியிற் புலந்தும் கலவியில் மகிழ்ந்தும், இன்பந் துய்த்துக் கொண்டிருப்பினு மிருப்பர். யோகிகட்குக் கிடைக்காத ஒள்ளிய செம்பொருள் கையில் வந்து கிடைக்கச், சின்முத்திரை சாத்தி மௌனத்தோடு யோகம் புரிந்து கொண்டிருப் பினுமிருப்பர். கற்பனையைக் கடந்து நிற்றலினுலே, இந்த நிலேயிற்ருன் நிற்பர் என்னும் வரையறை அப்பெருமானுக்கு இல்லேயாம்.

நேரிசை வெண்பா

இன்னீ ருலகத்துக் கின்னுயிர்யா மென்றுணர்த்து
நன்னீர் வயற்கமலே நாதனுர்—பொன்னுர்ந்த
சேவடிக்கா ளானுர் சிலரன்றே தென்புலத்தார்
கோவடிக்கா ளாகார் குலேந்து. 25

இடம் கொண்ட கடல் சூழ்ந்த உலகத்துக்கு இனிய உயி நாமே என்றுணர்த்துகின்ற, நன்னீரை உடைய வயல் சூழ்ந் கமலைக் கடவுளது அழகிய சிவந்த திருவடிகளுக்கு ஆட்பட்டவர்கள், சிலர் மட்டும் அன்றோ? தென் திசையா தலைவனாகிய கூற்றுவனது கோபத்திற்கு வருந்தி ஆளாகாதவர்கள்

கட்டளைக் கலித்துறை

குலைவைத்த செவ்விள நீர்குளிர்
பூங்பொழிற் கொம்புக்கின்ப
முலைவைத்த தொக்குங் கமலேசர்
வேணி முகிழ்நகை வெண்
டலைவைத்த வேனற் புனமொக்குங்
கங்கையத் தண்புனத்தி
னிலைவைத்த மாதரை யொக்குங்
கவணுக்கு நீள்பிறையே 26

குளிர்ந்த பூம்பொழிலாகிய பெண்ணுக்குக், குலைகளை உடைய செவ்விள நீரை இன்பத்தைத் தருகின்ற முலையாக வைத்திருப்பதை ஒத்து விளக்குகின்ற, கமலைப்பதிக் கடவுளது சடை, குவிந்த விளக்கமாகிய வெள்ளிய தலைகளை வைத்த தினைப் புனத்தை ஒக்கும் கங்கை நங்கை அக்குளிர்ந்த புனத்திற்குக் காவலாக வைத்த பெண்ணை ஒப்பள், நீண்ட பிறைச் சந்திரன் கல் வைத்தெறியும் கருவியாகிய கவணை ஒக்கும்,

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பிறையொழுக வொழுகுபுனற் கங்கை யாற்றின்
பேரணையிற் றொடுத்துவிட்ட பெரும்பாம் பென்னக்
கறையொழுகும் படவரவம் படரும் வேணிக்
கண்ணுதலார் கமலையிற்பைங் கமலை போல்வீர்

நறையொழுகு மலர்ப்பொழில்குத் தகையாத் தந்தீர்
நானிரண்டு மாவடுவு நாடிக் கா்ணே
னிறையொழுகு மிளநீரு நிற்கக் காணே
னீர்செய்த காரியமென் னிகழ்த்து வேனே. 27

பிறைச் சந்திரனது கதிர்கள் ஒழுக, ஒழுகுகின்ற நீரையுடைய கங்கை ஆற்றினது பெரிய அணையிலே தொடர்பு செய்துவிட்ட நீண்ட வைக்கோற் புரியை யொத்து, நஞ்சைச் சிந்துகின்ற படத்தை உடைய பாம்பு ஊர்கின்றசடையை உடைய கண்ணுதற் பெருமானது, கமலை யென்னும் நகரத்தில் பசிய திருமகளை ஒத்தவரே! தேன் ஒழுகுகின்ற பூஞ்சோலையை எனக்குக் குத்தகையாகக் கொடுத்தீர் ஆனல் நான் இருமா வடுக்களையும் தேடிப் பார்த்துக் கண்டேனில்லை. பாரத்தை உடைய இளநீரும் அருக்கக் கண்டேனில்லை. நீர் செய்த இச்செயலைப் பற்றி என்ன சொல்லுவேன்!

நேரிசை யாசிரியப்பா

வேனிலா னுறுப்பின் மென்றசை யிறைச்சி
தீநாக் கறியத் திருக்கண் டிறந்தோய்
நான்மறை முனிவன் கான்முளை நிற்ப
விடற்கரும் பாசத்தொ டுடற்பொறை நீங்க
வுயிருண் கூற்றுக்குத் திருவடி வைத்தோய்
கருங்கடல் வண்ணன் வெள்விடை யாகி
யடிக டாங்கிய வுதவிக் காங்கவன்
முழுவென்பு சுமந்த கழுமுட் படையோய்
தேவா சிரயன் றிருக்கா வணத்து
மேவா நின்ற விண்ணவர் குழாங்க
ளுருத்திர கணங்களென் றேடினர் வணங்கி
யருக்கிய முதல வகனமர்ந் தளிப்ப
வித்தலத் துற்றவ ரினித்தலத் துறுரெனக்

கைத்தலத் தேந்திய சுனன்மழு வுறழு
மழுவுடைக் கைய ராகி விழுமிதின்
மாந்தர் யாவருங் காந்தியிற் ெறாலியும்
வரமிகு கமலைத் திருநகர்ப் பொலிந்தோ
யெழுதாக் கிளவிநின் மொழியெனப் படுதலி
னின்பெருந் தன்மை நீயே நவிற்றுதன்
மன்பெரும் புலமைத் தன்றே யும்பரி
னின்னோ ரன்ன ரின்மையி னின்னிலை
கூறுய் நியெனிற் றேறுந ரிலராற்
றன்னுடை யாற்றன் முன்னூர் முன்னர்த்
தற்புகழ் கிளவியுந் தகுமென் றம்ம
நிற்புகழ்ந் திசைத்தனை நீயே யாக
விருமர் காட்சிப் பொருடுணிந் துணர்த்தா
தியங்கா மரபி னிதுவிது பொருளென
மயங்கக் கூறுதன் மாண்புடைத் தன்றே
யளவில் காட்சியை யையமின் றுணாத்தலிற்
றளரா நிலைமைத் தென்ப வென்றலிற்
றன்னுடை மயக்கந் திசைமேல் வைத்துச்
சென்னெறி பிழைத்தோன் றிசை மயங்கிற்றென
மொழிகுவ தேய்ப்ப முதுக்குறை வின்மையிற்
பழமறை மயங்கிற் றென்னு முழுவது
மெய்யா திசைக்குதும் போலு
மையநின் றன்மை யளப்பரி தெமக்கே 28

வேளிலாகிய மன்மதனது உறுப்புக்களின் மெல்லிய தசை இறைச்சியை நெருப்புச் சுவைத்தறியத் திருக் கண்களைத் திறந்தவனே! நான் மறை முனிவனாகிய மிருகண்டுவின் புதல்வன் மார்க்கண்டன் மயங்கி நிற்கத் தவிர்தற்கரிய பாசமும் உடற்பொறையும் நீங்கும்படி உயிருண்ணுகின்ற கூற்றுவனுக்குத் திருவடியைப் பயன் படுத்தியவனே! கருங்கடல் வண்ணனாகிய திருமால் வெள்ளிய இடபமாகி, உனது திருவடிகளைத் தாங்கிய

உதவிக்காக, அவளது அனைத்தெலும்பையும் தாங்குகின்ற சூலப் படையை உடையவனே! தேவாசிரிய னென்னும் திருமண்ட பத்தில் வந்திருந்த தேவர் குழாங்கள், உருத்திரர் குழாமென்று நினைத்து ஓடிச்சென்று வணங்கி, அருக்கியம் முதலியவற்றை மனமகிழ்ந்து கொடுக்க, இத்திருவாரூர்ப் பிறந்தார் இனிப் பூமியிற் பிறவார் என்று, கையிடத் தேந்திய எரிகின்ற நெருப்பை ஒத்த மழுவென்னும் படையை உடைய கையினராய்ச், சிறப்போடு மக்கள் யாவரும் அருளொளியில் விளங்குகின்ற மேன்மை மிகுந்த கமலைத் திருநகரத்தில் விளங்கு கின்றவனே! எழுதாக் கிளவியாகிய வேதம் உனது வாய்மொழி யெனச் சொல்லப்படுதலின், உனது பெருந்தன்மையை நீயே எடுத்துக் கூறுதல் பெரிய அறிவுடைமை ஆகாதன்றோ! தேவர்களுக்குள் நின்னனையார் யாரும் இல்லாமையால், உனது தன்மையை நீ சொல்லாவிடின், தெளிவார் யாருமிலராவர். தனது வலிமையை உணராதவர் முன்னே, தன்னைப் புகழுகின்ற சொல்லும் தகுதியுடைதென, உன்னைப் புகழ்ந்து நீயே உரைத்தனை போலும்! மயக்கந் தீர்க்கின்ற காட்சியில், பொருளைத் துணிவு படுத்தி உணர்த்தாது, விளங்காத முறையில் இது இது பொருளாகுமென்று மயங்கும்படி சொல்லுதல் பெருமையுடையதாகாதே! அளவில்லாத காட்சிப் பொருளை ஐயம் நீங்க உணர்த்துதலில், வேதம் சோர்வடையாத தன்மையது என்று சொல்லுவர். அறிவுடையயோர் இவ்வாறு சொல்லுதலால் தன்னுடைய மயக்கத்தைத் திசையின்மேல் வைத்துச் சொல்லு கின்ற வழி தப்பியவன், திசை மயங்கிற்று என்று சொல்லுவதை ஒப்ப, பேரறிவு இல்லாமையால் பழைய வேதங்கள் மயங்கின என்று உலக முழுவதும் இளையாது சொல்லும் போலும்! ஐயனே! உனது தன்மை எங்களுக்கு அளவிட முடியாததாகும்.

நேரிசை வெண்பா

அள்ளற் கருஞ்சேற் றகன்பணைசூ ழாரூரர்
வெள்ளப் புனற்சடைமேல் வெண்டிங்கள்-புள்ளுருவாய்
நண்ணிலா தாரை நகைக்கு நகையன்றோ
தண்ணிலா வென்னுஞ் சகம். 29

அள்ளத்தக்க அரிய சேற்றை உடைய விரித்த வயல்கள் சூழ்ந்த திருவாரூர்ப் பெருமானது பெருநீரையுடைய சடையின் மேலிருக்கின்ற வெள்ளிய சந்திரன், அன்னப் பறவை யுருவோடு சென்று அடைய முடியாத பிரமனைக் கண்டு, சிரிக்கின்ற சிரிப்பையல்லவா தட்பமாகிய நிலவென்று உலகத்தார் சொல்லுவர்!

கட்டளைக் கலித்துறை

தண்மல ரும்பொழிற் றென்கம
லேசர்க்குச் சாத்துகின்ற
வொண்மலர் சொன்மலர்க் கொவ்வாது
போலுமற் றோர்புலவன்
பண்மலர் சாத்திப் பணிகொண்ட
வாபச்சை மால்சிவந்த
கண்மலர் சாத்தியுங் காண்பரி
தான கழன் மலரே. 30

தட்பம் விரிந்த சோலைகளை உடைய தென்திசைக் கண்ணதாகிய கமலைக் கடவுளுக்குச் சாத்துகின்ற ஒள்ளிய பூக்கள் சொல் மலருக்கு ஒப்பாகா போலும்! ஒப்பற்ற அறிஞராகிய ஆளுடைய நம்பிகள், பச்சை நிறத்தை உடைய திருமால் தனது சிவந்த மலரைச் சாத்தியும், காண முடியாத பாத மலரை, இசையுடைய சொன் மலர் சாத்தி வேலை வாங்கிக்கொண்டாரன்றோ ?

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மல்லல்வளங் கனிந்தபுகழ்க் கமலேசர்
திருவுருவும் வாம பாகத்
தல்லமர்பைங் குழலுமையா டிருவுருவு
மிருவருக்கு மமுத மான
கொல்லயில்வேற் பசுங்குழவி திருவுருவு
மருவுருவாங் குணங்கண் மூன்றின்
நல்லுருவா தலினன்றோ விவரகில
காரணராய் நவிழ்கின் றூரே. 31

மிக்க வளம் முதிர்ந்த புகழை உடைய கமலைக் கடவுளது திருவுருவமும், இடப்பாகத்திலுள்ள இருளனைய பசிய கூந்தலை யுடைய உமையம்மையினது திருவுருவமும், அவ்விருவருக்கும் அமிழ்தம் போன்ற, கொல்லுந் தொழிலுடைய கூரிய வேல் பிடித்த பசுங்குழவியாகிய முருகனது திருவுருவமும் அருவுருவாகிய சத்து, சித்து, ஆனந்தமென்னும் முக்குணங்களும் கூடியாகிய நல்ல திருவுருவம் ஆதலினலன்றோ, இவரை உலக காரணப் பொருளாகச் சொல்லுகின்றூர்கள்.

நேரிசையாசிரியப்பா

நவமணி குயின்ற நாஞ்சில்சூழ் இடக்கு
முவளகங் கண்ணுற் றுவர்க்கட லிஃதெனப்
பருகுவா னமைந்த கருவிமா மழையுஞ்
செங்கண்மால் களிறுஞ் சென்றன படிய
வெங்கண்வா ளுழவர் வேற்றுமை தெரியார்
வல்லிலங் கிடுதலின் வல்விலங் கிதுவெனச்
செல்விலங் கிடவெதிர் சென்றனர் பற்றக்
காக பந்தரிற் கைநிமிர்த் தெழுந்து
பாகொடு முலாவிப் படர்தரு தோற்ற

நெடுவேல் வழுதி நிகளம் பூட்டிக்
கொடுபோ தந்த கொண்டலே நிகர்க்குஞ்
சீர்கெழு கமலைத் திருநகர் புரக்குங்
கார்திரண் டன்ன கரைமிடற் றண்ணன்
மூவரென் றெண்ணநின் முதற்றெழில் பூண்டு
மேவலிற் செய்துமென் றெண்ணு ராகி
யடங்கா வகந்தைக் கறிவெலாம் வழங்கி
யுடம்பு வேரு யுயிர்ப்பொறை சுமந்து
நாளு நாளு நேடினர் திரிந்துங்
காணு தொழிந்ததை நிற்க நாணு
தியாவரு மிறைஞ்ச விறுமாப் பெய்துபு
தேவரென் றிருக்குஞ் சிலர்பிறர் தவத்தினு
மிகப்பெருந் தொண்டரொ டிகலிமற் றுன்னெடும்
பகைத்திறம் பூண்ட பதகனே யெனினு
நின்றிருப் பாத நேர்வரக் கண்டு
பொன்றின னேனும் புகழ்பெற் றிருத்தலி
னிமையா முக்கணெந் தாய்க்கு
நமனுர் செய்த நற்றவம் பெரிதே. 32

நவமணிகள் பதித்த மதிலைச் சூழ்ந்திருக்கின்ற அகழியைக் கண்டு, உவர்க்கடல் இது என எண்ணி, உண்ணுதற்கு வந்த உலகிற்குக் காரணமாகிய மேகமும், சிவந்த கண்களை உடைய பெரிய யானைகளும் போய் அணையக், கொடுங் கண்களையுடைய வாளுழவர்களாகிய வீரர்கள், அவ்விரண்டற்கும் வேற்றுமை தெரியாதவர்களாகி, வலிமை விளங்குதலால் மேகம் விலகிச் செல்லத், திண்ணிய யானையிதுவென்று எதிரே சென்று பிடிக்கக் காகக் கூட்டத்தைப்போல் மேலெழுந்து பாகர்களோடும் உலாவுகின்ற காட்சி, நீண்ட வேலாயுதத்தை உடைய உக்கிர குமார பாண்டியன், விலங்குகளைப் பூட்டிக்கொண்டு வந்த மேத்தை ஒக்கின்ற, சிறப்பு மிகுந்த கமலைத் திருநகரத்தைக் காக்கும், மேகந் திரண்டாற்போன்ற கறைக் கழுத்தை உடைய

தலைவனே! மூவரென்று எண்ணத் தகுந்த நிலையில் உனது முதற் றொழிலாகிய படைத்தல் முதலியவற்றைக் கொண்டும், உனது ஏவலில் செய்கின்றேமென்று நினையாதவராகி, அடங்காத செருக்குக்கு அறிவையெல்லாம் கொடுத்து, அன்னமும் பன்றியுமாகி உருவம் வேறுபட்டு, உயிர்ப் பாரத்தைச் சுமந்து தினம் தினமும் தேடித் திரிந்தும் காணாது போனதை எண்ணி வெட்காது, எல்லோரும் வணங்கச் செருக்கடைந்து, தேவரென்ற பெயரோடிருக்கின்ற சிலர், நிற்க; ஏனையோர் தவத்திலும் பெருந்தவத்தை உடைய தொண்டராகிய மார்கண்டரோடு மாறுபட்டு, உன்னோடும் பகைத் திறத்தைக் கொண்ட பாவியே யானாலும், உனது திருவடிகளை நேராகக் கண்டு இறந்தானேனும் புகழடைந்திருத்தலினாலே இமையாத முக்கண்களையுடைய எந்தா யெனத்தகுந்த உனக்கு, நமன் செய்த நல்ல தவம் பெரியதேயாகும்.

(செவிலியிரங்கல்) நேரிசை வெண்பா

நற்கரும்பு முக்கட் கரும்பென்னு நங்கைமீர்
விற்கரும்பன் கைக்கரும்போ வேம்பென்னுஞ் [சொற்கரும்பின்
வாமக் கரும்பு மனைக்கரும்பா மாரூரர்
காமக் கரும்புங் கரும்பு 33

நங்கையர்களே! கரும்பு போன்ற சொற்களையுடைய இடப் பாகத்திருக்கின்ற கரும்பாகிய உமையம்மையை, மனைக்குரிய கம்பாகக் கொண்ட திருவாரூர்ப் பெருமானது, காமவின்பத்திற்கு அரும்புகின்ற கரும்பாகிய தலைவி, முக்கண்களையுடைய இறைவனை நல்ல கரும்பென்று சொல்லுவாள் கரும்பு வில்லையுடைய மன்மதனது கரும்பை வேம்பென்று சொல்லுவாள்

கட்டளைக்கலித்துறை

கரும்புற்ற செந்நெல் வயற்கம
லேசர்கண் டார்க்குமச்சந்
தரும்புற்றி னிற்குடி கொண்டிருந்
தாரது தானுமன்றி

விரும்புற்று மார்சுணப் பூணணிக்
தார்வெவ் விடமுமுண்டார்
சுரும்புற்ற கார்வரைத் தோகைபங்
கான துணிவு கொண்டே. 34

கரும்பை ஒத்து வளர்ந்த செந்நெற் பயிரை உடைய வயல்கள் சூழ்ந்த கமலைக் கடவுள், வண்டுகள் பொருந்திய மேகங்கள் படிகின்ற மலையிற் பிறந்த மயிலாகிய உமையம்மை பங்காளியான துணிவினாலே, பார்த்தோருக்குக்கூடப் பயத்தைத் தருகின்ற புற்றிடத்தில் குடிகொண்டு இருந்தார். அதுவல்லாமல் விருப்பத்துடன் பாம்பணிகளை அணிந்நார். கொடிய நஞ்சையும் உண்டார்.

(தலைவிவருந்தல்)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

கொண்டலை யலைத்தபல தண்டலை யுடுத்தழகு
கொண்டகம லைப்ப தியுளார்க்
கண்டபி னெனக்கிதழி தந்தன ரெனப்பசலை
கண்டுயிர் தளிர்த்த மடவா
ளண்டரமு தொத்தவமு தந்தனையிருட் கடுவி
தன்பரருண் மிச்சில்கொ லெனு
வுண்டிடு முளத்திலவ ருண்குவரென் மிச்சிலென்
வுண்டதை மறுத்து மிழுமே. 35

மேகங்களை யலையச் செய்கின்ற பல சோலைகளைச் சுற்றிலும் உடுத்து, அழகு விளங்குகின்ற கமலை நகரத்தை உடைய தியாகேசரைப் பார்த்த பின்பு, எனக்குக் கொன்றை மாலையை அருளினாரென்று பசலையைப் பார்த்து உயிர்செழித்த மடந்தை, வானோர்களின் அமிழ்தத்தை யொத்த பாலை, கரிய நஞ்சாகிய இது, எனதன்பராகிய இறைவன் எனக்கருளிய மிகுதிப்பகுதி யென்று குடிப்பாள், குடிக்கும் பொழுது தனது உள்ளத்திலே இருக்கின்ற அத்தியாகேசப் பெருமான், தனது எச்சிற்பகுதியை உண்ணுவாரே என்று, குடித்ததை மறுபடியும் கக்குவாள்.

நேரிசையாசிரியப்பா

உமிழ்தேன் பிலிற்று மொள்ளிணர்க் கூந்த
லமிழ்துகு மழலை யம்மென் றீஞ்சொற்
சில்லரித் தடங்கண் மெல்லிய லொருத்தி
வரிசிலைத் தடக்கைக் குரிசின்மற் றொருவன்
பொன்னெடு மார்பிற் பொலன்கல னிமைப்பத்
தன்னுருத் தோற்றந் தரிக்கலள் வெகுண்டு
மாலா யினனென வணங்கின னிரத்தலிற்
றேலா மொழியை வாழியை பெரிதெனப்
புலந்தன ளெழுதலுங் கலங்கினன் வெரீஇக்
கண்மலர் சிவப்ப மெய்பசப் பெய்தலிற்
றானு மாலாந் தன்மையள் கொல்லெனத்
தேறினன் றாழ்ந்து சிலம்படி திருத்திப்
பஞ்சியிற் பொலிந்த குஞ்சிய னிரப்பக்
கூடின ளல்லள் கூடா ளல்லள்
கைம்மிகு சீற்றமுங் காதலு மலைப்ப
வெள்ளப் புணர்ச்சியின் வேட்கையுள் ளடக்கி
யுள்ளப் புணர்ச்சிய ளூடின ணிற்பது
தாதவிழ் தெரியற் சாக்கியர் பெருமான்
காதலுட் கிடப்பக் கல்லெறிந் தற்றே
யித்திற மகளிரிளை ஞரொ டாடு
நித்தில மாட நீண்மறு குடுத்த
மைம்மாமுகி றவழு மணிமதிற் கமலைப்
பெம்மா னருமைப் பெருமா ளாயினு
மூனுண் வாழ்க்கைக் கானவர் குரிசில்
செஞ்சிலை சுமந்த கருமுகி லேய்ப்ப
வுண்டுமிழ் தீநீ ருவந்தன ராடியும்
விருப்படிக் கொண்ட மிச்சிலூண் மிசைந்துஞ்
செருப்படிக் கடிகள் செம்மாந் திருந்துந்

தொல்புகழ் விசயன் வில்லடி பொறுத்து
மருந்தமிழ் வழுதி பிரம்படிக் குவந்து
நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
றள்ளாக் காத றணித்தற் கம்ம
பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப
வொருகா லல்ல விருகா னடந்து
மெளியரி னெளிய ராயின
ரளியர் போலு மன்பர்க டமக்கே. 36

வெளிப்படுகின்ற தேன் துளிக்கும் ஒள்ளிய பூங்கொத்துக்களை உடைய கூந்தலையும், அமிழ்தம் வழிகின்ற அழகிய மெல்லிய இனிய மழலைச் சொற்களையும், சில செவ்வரிகளைக் கொண்ட பரந்த கண்களையுமுடைய மெல்லியலாளொருத்தி, கட்டப்பெற்ற வில்லைத் தாங்கிய நீண்ட கைகளையுடைய நம்பி ஒருவனின், அழகிய பரந்த மார்பில் பொன்னணிகள் ஒளி செய்யத், தன்னுடைய உருவம் அவ்வணிகலங்களில் தோன்றுதலைக்கண்டு அங்கே வேறொரு பெண் இருப்பதாகக் கருதிப் பொருத வளாய்ச் சினந்து ''மாலாயினேனென்று பணிந்தாய் இரத்தலில் தோல்வியில்லாத சொல்லை உடையாய் நீ பெரிதும் வாழ்க' என்று ஊடினவளாய் இருக்கையினின்றெழுதலும், தலைவன் கலங்கியவனாய் அஞ்சிக் காமத்தால் அவளது கண்மலர் சிவக்க உடல் பசப்படைந்திருத்தலால், அவளும் மாலான தன்மையள் எனந் தெளிந்து, கீழே தாழ்ந்து, காற்சிலம்புகளைத் திருத்திச், செம்பஞ்சின் குழம்பிற் பொலிந்த குடுமியை உடையவனாக இரக்கக், கூடினள் அல்லளாயும், கூடாதவள் அல்லளாயும் பெருஞ்சிறைமும், காதலும் கூடி வருத்த, மிகுதியான கூடலின் ஆசையை உள்ளடக்கி, மனத்தாற் புணரும் புணர்ச்சியை உடையவளாகி ஊடிநிற்பது; இதழ்கள் விரிந்த மாலையை உடைய சாக்கிய நாயனார், இறைவனிடத்து வைத்த காதல் உள்ளத்திலே நிறைந்திருக்கப், புறத்தே கல்லெறிந்ததைப் போலும்! இத்தன்மையுடைய பெண்கள், இளையார்களோடு விளையாடுகின்ற முத்துக்கள் பதித்த மாடங்களையுடைய, நீண்ட தெருக்களைச்

சுற்றிலு முடுத்த கரிய பெரிய மேகங்கள் தவழுகின்ற அழகிய மதில்களையுடைய கமலைக் கடவுள், அரிய பெருமானேயாயினும், ஊனுண்ணும் வாழ்க்கையை உடைய வேடர் தலைவராகிய கண்ணப்ப நாயனார், சிவந்த வில்லைச் சுமந்த கருமேகத்தை ஒப்ப, உண்டுமிழ்ந்த இனிய நீரை விரும்பி முழுகியும், ஆசைமிகுதிப் பட்ட எச்சில் உணவை அருந்தியும். செருப்பணிந்த அடிகளுக்கு மகிழ்ந்திருந்தும், பழம்புகழை உடைய அருச்சுனனின் வில்லடியைப் பொறுத்தும், அருந்தமிழ்ப் பாண்டியனது பிரம்படிகளுக்கு உவப்புடைந்தும், பேரிருளையுடைய நடுயாமத்தில் நாவலர் தலைவராகிய நம்பியாரூரரின் நீங்காக் காதலைத் தணிப்பதற்காகப் பரவையாரின் வாயிலில் அடிமலர்கள் சிவக்க ஒரு பொழுதல்ல; இரண்டு பொழுது நடந்தும், எளியவர்களுக்கும் எளியவராய் ஆயினர். அவர் அன்புடையாருக்கு எளியர்போலும் !

நேரிசைவெண்பா

தம்மேனி வெண்பொடியாற் றண்ணளியா லாரூரர்
செம்மேனி கங்கைத் திருநதியே - யம்மேனி
மானே யமுனையந்த வாணிநதி யுங்குமரன்
றானே குடைவேந் தனித்து. 37

தமது திருமேனியில் அணிந்திருக்கின்ற வெள்ளை நீற்றாலும், தண்ணருளாலும் திருவாரூர்ப் பெருமானது சிவந்த திருமேனியே! கங்கையாகிய அழகிய நதியாகும். அத்திருமேனியிலுள்ள கருநிறத்தையுடைய மான்போன்ற உமாதேவியே யமுனை நதியாவாள். செவ்விளங்குமரனாகிய முருகனே! அந்த வாணிநதியாவான். தனித்து நின்று இவ்மூவருடைய கருணை வெள்ளத்தும் அழுந்துவேம்.

கட்டளைக்கலித்துறை

தன்னொக்குஞ் செல்வக் கமலைப்
பிரான்செஞ் சடாடவிமற்
றென்னொக்கு மென்னி லெரியொக்குங்
கொன்றை யெரியிலிட்ட
பொன்னொக்கும் வண்டு கரியொக்குங்
கங்கையப் பொன்செய்விக்கு
மின்னொக்கும் பொன்செய் கிழக்கொல்ல
னொக்குமவ் வெண்பிறையே. 3

தனக்குத் தானே ஒப்பாகிய செல்வம் மிகுந்த கமலைப்பெரு மானுடைய சிவந்த சடைக்காடு, எதை ஒக்குமென்றால் நெருப்பை ஒக்கும். அச்சடையிலுள்ள கொன்றைப்பூ, நெருப்பிலிட்ட பொன்னை ஒக்கும் வண்டுகள் கரியை ஒக்கும், கங்கை அப்பொன்னை அணிகலமாகச் செய்விக்கின்ற மின்னனை பெண்ணை யொப்பாள், அந்த வெள்ளிய பிறைச் சந்திரன் பொன்னணி செய்கின்ற கிழக்கொல்லனை யொப்பான்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

வெண்ணிலவு கொழித்தெறிக்குஞ் செஞ்சடைமோ
லியர்வீதி விடங்க ராரூர்க்
கண்ணுதல்பொற் புயவரைசேர் தனவரைக
ளிரண்டவற்றுட் கனக மேரு
வண்ணல்புய வரைக்குடைந்து குழைந்துதலை
வணங்கிடுமெம் மன்னை பார
வண்ணமுலைத் தடவரையவ் வரைகுழையப்
பொருவதல்லால் வணங்கி டாதே. 3

வெள்ளிய நிலவைக் கொழித்து வீசுகின்ற செஞ்சடை முடியுடைய வீதி விடங்கராகிய ஆரூர்க் கண்ணுதலாரின், அழகிய பொற்றோள்களை யடைந்த செல்வமலைகள் இரண்டாகும், அவ்விரண்டனுள், பொன்மேருமலை, அண்ணலாரது புயமலைக்குத் தோற்று நெகிழ்ந்து தலைவணங்கியது. எமதன்னையாகிய உமையம்மையின் பாரத்தை உடைய அழகிய முலைத்தடமாகிய மலை, அப்பெருமானது புயமலை நெகிழும்படி, எதிர்த்துப் பொருவதல்லாமல் பணிந்து வணங்காது.

நேரிசையாசிரியப்பா

வண்டுகூட் டுண்ண நுண்டுளி பிலிற்றித்
தண்டே னுறைக்குந் தடமலர்ப் பொதும்பரின்
விழுக்குலை தெறிப்ப விட்புலத் தவர்க்குப்
பழுக்காய் தூக்கும் பச்சிளங் கமுகிற்
செடிபடு முல்லைக் கொடிபடர்ந் தேறித்
தலைவிரித் தென்னக் கிளைதொறும் பிணைத்து
மறிந்துகீழ் விழுந்த நறுந்துணர்க் கொடிக
ணாற்றிசைப் புறத்து நான்றன மடிந்து
தாற்றிளங் கதலித் தண்டினிற் படரவப்
பைங்குலைக் கமுகிற் படர்சிறை விரித்தொரு
கண்செய் கூந்தற் களிமயி னடிப்ப
நெடுந்தாண் மந்திகள் குடங்கையிற் றூக்கி
முட்புறக் கனிக டாக்கக் கொட்புறும்
வானர மொன்று வருக்கைத் தீங்கனி
தானெடுத் தேந்துபு தலைமேற் கொண்டு
மந்திக டொடர மருண்டுமற் றந்தப்
பைந்துணர்க் கொடியிற் படர்தரு தோற்றம்
வடஞ் சூழ்ந்து கிடந்த நெடும்பெருங் கம்பத்
தணங்கனு ளொருத்தி யாடின ணிற்பப்
பெரும்பணை தாங்கி மருங்கினர் கொட்டக்

குடந்தலைக் கொண்டொரு கூன்கழைக் கூந்தன்
வடந்தனி னடக்கும் வண்ணம தேய்க்கும்
பூம்பணை மருதத் தீம்புனற் கமலைத்
திருநகர் புரக்குங் கருணையங் கடவு
ளன்பெனு மந்தரத் தாசைநாண் பிணித்து
வண்டுழாய் முகுந்தன் மதித்தனன் வருந்த
வருட்பெருங் கடலிற் றோன்றி விருப்பொடு
மிந்திரன் வேண்ட வும்பர்நாட் டெய்தி
யந்தமி றிருவோடு மரசவற் குதவி
யொருகோ லோச்சி யிருநிலம் புரப்பான்
றிசைதிசை யுருட்டுந் திகிரியன் சென்ற
முசுகுந் தனுக்கு முன்னின் றுங்குப்
பொன்னுல கிழிந்து புடவியிற் றோன்றி
மன்னுயிர்க் கின்னருள் வழங்குதும் யாமென
மேவர வழங்குமான் மன்ற
யாவிரு நமர்கா ளிறைஞ்சுமின னீரே.

வண்டுகள் கூடியுண்ண நுண்ணிய துளிகளைச் சிந்திக், குளிர்ந்ததேன் மிகுதிப்படுகின்ற அகன்ற பூஞ்சோலையில், சிறந்த குலைகள் சிந்துப்படியாக விண்ணுட்டவர்க்குப் பழுத்த காய்களைத் தூக்கிக் கொடுக்கின்ற பசிய இளமையாகிய கமுகமரத்தில், செடிகளிற் படர்ந்த முல்லைக்கொடி படர்ந்தேறித், தலையை விரித்தாற் போலக் கிளைகள் தோறும் மிகுதிப்பட்டுத் திரும்பக், கீழே விழுந்த நல்ல பூங்கொத்துக்களை உடைய கொடிகள், நான்கு திசைப்புறங்களிலும் தொங்குகின்றனவைகளாய், மடங்கித், தாறுகளை உடைய இளமையான வாழைத் தண்டுகளிற் படரவும், அந்தப் பசிய இலைகளை உடைய கமுக மரத்தில், விரிந்த இறக்கைகளை விரித்துக் கண்கள் பொருந்திய தோகைகளை உடைய, மகிழ்கின்ற ஒருமயில் ஆடவும், நீண்ட கால்களையுடைய

குரங்குகள், முட்களைப் புறத்தே கொண்ட பலாப்பழங்களைக், குடங்கையில் தூக்கி அடித்து முழக்கவும், விரைவான குரங்கொன்று, இனிய பலாப் பழமொன்றை எடுத்தேந்தித் தலைமேற்கொண்டு, பெண் குரங்குகள் பின்தொடர மருட்சியடைந்து, அந்தப் பசிய பூங்கொத்துக்களை உடைய கொடியிற் செல்லுகின்ற காட்சி, கயிறு கட்டியிருந்த நீண்ட பெரிய கம்பத்தில், அணங்கனைய பெண்ணொருத்தி ஆடிக்கொண்டிருக்கவும், பெரிய பறைகளைத் தாங்கிப் பக்கத்திலுள்ளார் கொட்டவும், ஓர் கூனையுடைய கழைக் கூத்தாடி ஒரு குடத்தைத் தலையில் வைத்துக் கொண்டு கயிற்றில் நடக்கின்ற தன்மையை ஒத்த பூக்கள் நிறைந்த வயல்களை உடைய, மருத நிலஞ்சூழ்ந்த இனிய நீரை உடைய, கமலைத் திருநகரத்தைக் காக்கின்ற கருணைக் கடவுளாகிய தியாகேசர், அன்பென்னும் மலையிலே ஆசையென்னும் கயிற்றைக் கட்டி வளமாகிய துழாய் மாலையணிந்த திருமால் கடைந்து வருந்தப், பேரருட் கடலில் தோன்றி, இந்திரன் விருப்பங் கொண்டு வேண்ட விண்ணுலகத்தை யடைந்து, முடிவற்ற செல்வத்தொடு கூடிய அரசை அவனுக்குக் கொடுத்து, ஒப்பற்ற செங்கோல் செலுத்திப் பெரிய நிலவுலகத்தைக் காப்பதற்குத் திக்குகள் அனைத்திலும் செலுத்துகின்ற ஆணைச் சக்கரத்தையுடையவனாய்ச் சென்ற முசுகுந்த மன்னனுக்கு, முன்னின்றருளி, ஆங்குப் பொன்னுலகத்திருந்து இறங்கிப் பூவுலகில் தோன்றி நிலைபெற்ற உயிர்களுக்கு, இனிய அருளை நாம் வழங்குவோம், என்று உறுதியாகக் கொடுத்துக் கொண்டு வீற்றிருக்கின்றார். நம்மவர்களே! நீங்கள் யாவரும் வந்து வணங்குங்கள்.

நலம் பெருகுக

**
**